**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 35/2020**

**பி.வா.சா.3 – நாகூர்மீரா** **23.07.2026**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1ம் பிரதிவாதி சுலைமான் எனக்கு மாமா உறவு முறை ஆகும். எனது நிரூபண வாக்குமூலத்திற்கு உரிய விபரத்தை நானும் 1ம் பிரதிவாதியும் வழக்கறிஞரிடம் கூறினோம். 14.10.1981 அன்று 1ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியின் சகோதரர் முகம்மது இப்ராகிக்கும் இடையே ஏற்பட்ட பாக விஸ்தி வா.சா.ஆ.8 எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் இராஜகம்பீரம் பஞ்சாயத்து தலைவர் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. பட்டா எண் 490 சர்வே எண் 161/2 ல் கண்ட 55 செண்டு நஞ்சை நிலத்தை முகம்மது இப்ராகிம் கடன் வாங்கி தனது சுய சம்பாத்தியத்தில் வாங்கினார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது மாமனார் என்பதால் முகம்மது இப்ராகிம் சுய சம்பாத்தியத்தில் கிரையம் வாங்கவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.8 பாக விஸ்தி ஆவணத்தில் 2வது பக்கத்தில் சர்வே எண் 161/6 முகம்மது இப்ராகிம் கடன் வாங்கி கிரையம் வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா 1ம் லக்க சொத்து சர்வே எண் 127/10 48 செண்டை பூர்வீக சுவான்தாரரான ஜமால் பெயரில் பட்டா இருக்கும்போதே 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளதாக சொல்லி 2ம் பிரதிவாதிக்கு வா.சா.ஆ.9 தான செட்டில்மெண்ட் மோசடியாக எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 தான செட்டில்மெண்ட்டில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் தாவா

2வது லக்க சொத்தை பொறுத்து 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததாக சொல்லியுள்ள கிரைய ஆவணம் மோசடியானது என்றால் சரியல்ல. தாவா 1வது லக்க சொத்திற்கும் 2வது லக்க சொத்திற்கும் 02.12.2019 வரை பூர்வீக சுவான்தாரரான ஜமால் பெயரில் தான் பட்டா இருந்தது என்றால் சரியல்ல. நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல 1, 2 லக்க சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெறவில்லை என்றால் சரியல்ல. அதனால் தாவா 1, 2 லக்க சொத்துக்களை பொறுத்து 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரமும் 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த கிரைய பத்திரமும் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல ஆளுக்கு ஒரு பாகச்சீட்டு எழுதி வைத்துக்கொள்ளப்படவில்லை என்றும் ஒரே ஒரு பாகச்சீட்டு தான் எழுதினார்கள் என்றும் அந்த பாகவிஸ்தியும் நடைமுறைக்கு வரவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல எந்த விடுதலை ரசீதும் முகம்மது இப்ராகிம் எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. 1, 2 லக்க சொத்துக்களை பொறுத்து 02.12.2019க்கு பின்பு தான் தனித்தனியாக பட்டா ஏற்பட்டது என்றும் அதற்கு முன்பு வரை பூர்வீக சுவான்தாரரான ஜமால் பெயரில் தான் பட்டா இருந்தது என்றும் சொன்னால் சரியல்ல. முகம்மது இப்ராகிம் இராஜகம்பீரத்தில் உள்ள பூர்வீக வீட்டடி மனையில் தனது சுய சம்பாத்தியத்தில் வீடு கட்டி ஆளுக்கு பாதியாக பிரித்துக்கொண்டார்கள்

என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பாதி வீட்டை 1ம் பிரதிவாதிக்கு முகம்மது இப்ராகிம் பிரித்துக்கொடுத்ததால் தான் தாவா 2வது லக்க சொத்தை முகம்மது இப்ராகிம் வைத்துக்கொள்ள 1ம் பிரதிவாதி சம்மதித்தார் என்றால் சரிதான்.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை